Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 11, 2023

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 11, 2023 | ஒளி: 08 கதிர்: 248 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## இலங்கையில் தங்க கையிருப்பு உயர்வு



இலங்கையின் உத்தியோகபூர்வ தங்க கையிருப்பு மார்ச் மாதத்தில் 7.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், அன்னிய சொத்துகளின் கையிருப்பும் மார்ச் மாதத்தில் 21.3 சதவீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தொடர்ச்சி P2

## வருடப்பிறப்பு வாரத்தில் வலுப்பெறுகிறது ரூபாய்



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி, திங்கட்கிழமை (10) மேலும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

சித்திரை புத்தாண்டுக்கு பின்னர்

# கட்சி தாவல்கள் அரங்கேறும்



### பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய குழு

எதிர்வரும் தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர், சில கட்சி தாவல்கள் இடம்பெறும் என்று ஊகிக்கப்பட்ட நிலையில், புத்தாண்டின் பின்னர் அரசாங்கத்துக்கு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வார்கள் என்பதை எம்.பிக்கள் இருவர் உறுதிப்படுத்தியுள்ளனர். சுகாதார அமைச்சுப் பதவியை ராஜித சேனாரத்ன ஏற்றுக் கொள்வார் என்று செய்தி வெளியாகியிருந்தது. ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போது ராஜித எம்.பியும் அதை மறுத்திருக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதற்காக குழுவொன்றை நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், புத்தாண்டுக்குப் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சில உறுப்பினர்கள் அரசாங்கத்துக்குச் செல்வார்கள் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, திங்கட்கிழமை (10) தெரிவித்தார்

தொடர்ச்சி P2

## மலையக பல்கலைக்கழகத்தை அமைக்க ஜனாதிபதி பணிப்பு

### ஜீவனின் கோரிக்கையை ஏற்றார் ஜனாதிபதி



மலையக பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார். நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்றது.

இதன்போது மலையக பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல்

தொடர்ச்சி P2

## 534 வீதி விபத்துகளில் 564 பேர் உயிரிழப்பு

### கடந்த 5 நாள்களில் 25 பேர் பலி



2023ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் ஏப்ரல் 9ஆம் திகதி வரை நாடு முழுவதும் நடந்த 534 வீதி விபத்துகளில் 564 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சா/த பரீட்சை பிந்தியது



2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம், திங்கட்கிழமை (10) தெரிவித்தது.

தொடர்ச்சி P2

## சுற்றிவளைப்பில் முட்டை குறித்தே அதிக கவனம்



பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த நுகர்வோர் விவகார அதிகார சபை, விசேட சுற்றிவளைப்பின் போது முட்டை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக தெரிவித்தது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களை பதுக்கி வைத்தமை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்ட 1,500 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபை குறிப்பிட்டது நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்கின்றமை, அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்கின்றமை உள்ளிட்ட பல குற்றச்செயல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

விசேட சுற்றிவளைப்புகளுக்காக மேலதிக குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், விடுமுறை தினங்களிலும் இரவு நேரங்களிலும் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்தது.

## இ.போ.ச பஸ்களிலும் இனி கியூஆர் முறைமை



இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் பயணச்சீட்டுகளுக்கு கியூஆர் அல்லது அட்டை முறைமையில் கட்டணம் அறவிப்படும் என்றும் இந்த வருடத்துக்குள் குறிப்பிட்ட புதிய திட்டம் அறிமுகமாகும் என்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சில பகுதிகளில் பயணிகளிடம் அறிவிடப்படும் கட்டணங்களை சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உரியவாறு டிப்போக்களில் சமர்ப்பிப்பதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதன் காரணமாக புதிய தொழில்நுட்பத்தினூடாக பயணிகளிடமிருந்து போக்குவரத்து கட்டணத்தை அறிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## நிதியமைச்சுடன் பேசி நியாயம் வழங்குகிறேன்

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் பிரதமர் தெரிவிப்பு

### ஏப்ரல் 25 தேர்தல் இல்லை என்கிறார் வக்கம்புர



தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைகளுக்கு நிதி அமைச்சுடன் கலந்துரையாடியதன் பின்னர் நியாயம் வழங்குவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சஹ்ரானின் மைத்துனர் மீண்டும் கைதானார்

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களின் முக்கியஸ்தர்களில் ஒருவராக கருதப்பட்டவரும் அவ்வியக்கத்தின் தலைவர் எனக்கூறப்பட்டவருமான சஹ்ரான் ஹாசிமின் மைத்துனர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ், கைது செய்யப்பட்ட இவர் மூன்று வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த

தொடர்ச்சி P2



கணக்காய்வு ஆணைக்குழுவின்

## புதிய உறுப்பினர்கள் பதவியேற்றனர்

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (09) பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரால் திங்கட்கிழமை (10) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் பதவி அடிப்படையில் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளராவார் என்பதுடன், கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு டபிள்யூ.பி.சி விக்கிரமரத்ன பதவி பிரமாணம் செய்துகொண்டார்.

அது மாத்திரமன்றி ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற நீதிபதி நிஹால் சுனில் ராஜபக்ஷ, நந்தசீலி கொடகந்த, ஞானானந்தராஜா தேவஞானன், ஏ.எம். தர்மஜித் நயனகாந்த ஆகியோரும் பதவி பிரமாணம் செய்துகொண்டனர்.

## உணவு பணவீக்க பட்டியலில் இலங்கைக்கு 10ஆம் இடம்




உலகளாவிய ரீதியில் உணவுப் பணவீக்கம் அதிகமாக உள்ள நாடுகளைத் தரப்படுத்தி, உலக வங்கி அண்மையில் வெளியிட்ட பட்டியலில் 9 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, இம்முறை 10 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலக வங்கியின் அண்மைய உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளதுடன், 2022ஆம் ஓகஸ்ட் மாதம் வெளியான அறிக்கையில் இலங்கை 5ஆவது இடத்தில்

தொடர்ச்சி P2

## நலிந்த பிரிவினருக்கான கொடுப்பனவை பெருந்தோட்டங்களுக்கும் கொடுக்கவும்



நலிந்த பிரிவினருக்கு மாதாந்தம் வழங்கும் 14ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை பெருந்தோட்ட மக்களுக்கும் வழங்குமாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் குறைந்த வருமானம் பெறும் நலிந்த பிரிவு குடும்பங்களுக்கு மாதாந்தம் 14,000 ரூபாய் இக்குடும்பங்களது வங்கி கணக்குகள் மூலம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதை வரவேற்றுள்ள அவர், பொருளாதார சீர்திருத்தம் நிகழும் போது, மேன்மேலும் நெருக்கடிக்கு உள்ளாகும் பிரிவினருக்கு இத்தகைய மாதாந்த நலன்புரி கொடுப்பனவு வழங்குவது சரியானது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்த நலன்புரி கொடுப்பனவு இலங்கையின் மிகவும் வருமானம் குறைந்த பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். பதுளை, கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பின்

தொடர்ச்சி P2

## நிறுத்தாமல் சென்ற காரை சுட்டுப் பிடித்த பொலிஸார்

சமிக்ஞையை மீறி நிறுத்தாமல் சென்ற கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய பொலிஸார், மூவரைக் கைது செய்த சம்பவம் பொல்கஹாவெல - குருநாகல் வீதியில் பொல்கஹாவெல நீதவான் நீதிமன்றத்துக்கு அருகில் திங்கட்கிழமை (10) முற்பகல் இடம்பெற்றது.

குருநாகல் நோக்கி காரில் போதைப்பொருள் கடத்துவதாக பொல்கஹாவெல பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய உடவெல பிரதேசத்தில் பொலிஸார் வீதித்தடை அமைத்திருந்தனர்.

அதன்போது, சந்தேகத்திற்கிடமான காரை அடையாளம் கண்டு கொண்ட பொலிஸார்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கட்சி தாவல்கள் அரங்கேறும்

இந்நிலையில், புத்தாண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் அரசியல் ரீதியாக பல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக முன்னாள் அமைச்சரும் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சன்ன ஜயசுமனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி குறித்து தெரிவித்த நளின் பண்டார எம்.பி, கட்சி தாவல்களை மறுக்க முடியாது என்றும் ராஜித சேனாரத்ன, கட்சி தாவி அமைச்சை ஏற்கும் எண்ணத்தைக் கொண்டிருந்தாகவும் குறிப்பிட்டார்.

ராஜிதவுக்கு ஜனாதிபதியை ஆதரிக்கும் எண்ணம் இருந்ததாகவும் அவர் பலமுறை கட்சி தாவியுள்ளதாகவும் குறிப்பிட்ட நளின் எம்.பி, சில எம்.பிக்கள் தமது கட்சியில் இருந்து செல்வார்கள் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் 20ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் கட்சி தாவல்கள் அரங்கேறும் என சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

புத்தாண்டுக்குப் பின்னரான அடுத்த இரண்டு வாரங்கள் இந்த நாட்டின் அரசியலுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்றும் நாட்டுக்கு நல்ல முடிவை எடுத்தால் அவர்களை ஆதரிப்போம் என்றார்.

## வருடப்பிறப்பு வாரத்தில் வலுப்பெறுகிறது ரூபாய்

மத்திய வங்கியால் திங்கட்கிழமை (10) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களில் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 311 ரூபாய் 63 சதமாகவும் விற்பனை விலை 327 ரூபாய் 72சதமாகவும் பதிவாகியுள்ளது.

## 534 வீதி விபத்துகளில் 564 பேர் உயிரிழப்பு

இந்த விபத்துக்களில், 1,345 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், மேலும் 2,446 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்த அவர், கடந்த 5 நாள்களில் நடந்த 21 வீதி விபத்துகளில் 25 பேர் உயிரிழந்துள்ளர் என்று சுட்டிக்காட்டினார்.

நாளாந்தம் நடக்கும் வீதி விபத்துகள் காரணமாக 5 தொடக்கம் 10 பேர் உயிரிழப்பதாகவும் இது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலை என்றும் குறிப்பிட்டார். கவனக்குறைவு, மதுபோதை, அதிக வேகம், போக்குவரத்து விதிகளை மீறுதல், பாதசாரிகள் கவனக்குறைவாக வீதியைக் கடத்தல் போன்ற காரணங்களால் வீதி விபத்துகள் அதிகம் நிகழ்ந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

வீதியில் செல்லும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்துமாறு அனைத்து சாரதிகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

## இ.போ.ச பஸ்களிலும் இனி கியூஆர் முறைமை

இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களுக்கு புதிய பஸ்களைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்குள் லங்காமாவை நஷ்டமடையாத நிறுவனமாக மாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## சஹ்ரானின் மைத்துனர் மீண்டும் கைதானார்

அதன்பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அவர், குளியாப்பிட்டி, கட்டுபொத்த பிரதேசத்தில் இருந்து நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தில் உள்ள அவரது மனைவின் பெற்றோரின் வீட்டுக்கு வருகைதந்து கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டார். அவருடன் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்த நபர், சஹ்ரான் ஹாசிமின் மனைவியான பாத்திமா என்பவருடைய சகோதரர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவல்களின் பிரகாரம், சந்தேகத்தின் பேரில் இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இந்தச் சகோதரர் 2019ஆம் ஆண்டில் இருந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். 2022 செப்டெம்பர் 23ஆம் திகதி மேல்நீதிமன்றத்தின் ஊடாக பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## மலையக பல்கலைக்கழகத்தை அமைக்க ஜனாதிபதி பணிப்பு

மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் விடுத்த கோரிக்கையை ஏற்றே, ஜனாதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்தார். நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையால் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அடுத்தக்கட்ட நகர்வுகள் ஸ்தம்பித்தன. இந்நிலையில் இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் இன்று ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ள நிலையில், விரைவில் பணி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஷ்வரன், வீ.இராதாகிருஷ்ணன், எஸ்.பி. திஸாநாயக்க, சீ.பீ ரத்னாயக்க ஆகியோரும், ஜனாதிபதி செயலாளர், மாகாண ஆளுநர், அரச அதிபர், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது ஸ்தம்பித நிலையில் உள்ள அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பது பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், நுவரெலியா மாவட்ட சுற்றுலா அபிவிருத்தி, வசந்தகால பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

## நலிந்த பிரிவினருக்கான கொடுப்பனவை பெருந்தோட்டங்களுக்கும் கொடுக்கவும்

அவிசாவளை, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பெருந்தோட்ட குடும்பங்களை வழமைபோல் ஒதுக்கி விடுவதை நாம் இம்முறை ஏற்க போவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாளாந்த சம்பளம் ரூ. 1,000 + ஆகவே மாதம் ரூ.25,000 + என காகிதத்தில் கணக்கு எழுதி இம்மக்களை தவிர்க்க கூடாது. அதேபோல், பெருந்தோட்ட பிரதேசத்தில் தோட்டங்களில் வேலை செய்யாதோரும் வாழ்கிறார்கள். அவர்களும் குறைந்த வருமானம் பெரும் நலிந்த பிரிவினரே. அவர்களுக்கும் இந்த மாதாந்த நலன்புரி கொடுப்பனவு கிடைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## நிதியமைச்சுடன் பேசி நியாயம் வழங்குகிறேன்

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் பிரதமருக்கும் இடையில் திங்கட்கிழமை (10) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை பிரதமர் அறிவித்துள்ளார்.

இது குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர, கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்குறிப்பிட்ட விடயங்களைக் குறிப்பிட்டார்.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நிதி அமைச்சுடன் கலந்துரையாடியதன் பின்னர், தேர்தல் தொடர்பான அறிக்கையை எதிர்காலத்தில் வெளியிடுவார்கள் என்றும் வக்கம்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்த முடியாது என்று தெரிவித்த அவர், தபால் வாக்களிப்பு இல்லை என்றும் 25ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவால் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கப்படும் என்றார்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு எப்படி சம்பளம் வழங்குவது என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணைக்குழுவிடம் இருந்து பரிந்துரை அனுப்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறுத்தாமல் சென்ற காரை சுட்டுப் பிடித்த பொலிஸார்

காரை நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போதும் கார் முன்னேறிச் சென்றுள்ளது. அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை அடுத்து, டயரைத் துளைத்த தோட்டா, காரை நிறுத்தியது.

அதையடுத்து, காரில் பயணித்த மூவரும் தப்பிச் செல்ல முற்பட்ட போதும் பொலிஸார் அவர்களை துரத்திப் பிடித்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சா/த பரீட்சை பிந்தியது

**மே மாதம் 29 ஆம் திகதி முதல் ஜூன் 8ஆம் திகதி வரை பரீட்சையை நடத்த எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது**

சாதாரண தரப் பரீட்சையை மே மாதம் 15 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குறித்த நாள்களில் பரீட்சை நடத்துவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனைக் கருத்திற் கொண்டு மே மாதம் 29 ஆம் திகதி முதல் ஜூன் 8ஆம் திகதி வரை பரீட்சையை நடத்த எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

அரசாங்கத்துக்கும் அதன் வரிக் கொள்கைகளுக்கும் எதிராக ஆசிரியர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் காரணமாக சாதாரண தரப் பரீட்சை முன்னர் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் தங்க கையிருப்பு உயர்வு

நாட்டின் உத்தியோகபூர்வ தங்க கையிருப்பு பெப்ரவரியில் சுமார் 28 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட நிலையில், மார்ச்சில் 30 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

பெப்ரவரியில் 2,219 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் வெளிநாட்டு சொத்து கையிருப்பு மார்ச் மாதத்தில் 2,691 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு கடந்த மாதம் 20.3 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் மார்ச் மாதத்தில் 2,184 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2,628 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

## உணவு பணவீக்க பட்டியலில் இலங்கைக்கு 10ஆம் இடம்

இருந்தமை குறிப்பிடத்தக்கது.

லெபனான் முதலாம் இடத்திலும் சிம்பாப்வே மற்றும் ஆர்ஜென்டினா ஆகிய நாடுகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களிலும் உள்ளன.

லெபனானில் உணவுப் பணவீக்கம் 139 சதவீதமாகவும், சிம்பாப்வே மற்றும் அர்ஜென்டினாவில் உணவுப் பணவீக்கம் முறையே 138 மற்றும் 103 சதவீதமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நிலவிய உரத்தட்டுப்பாடு காரணமாக 40 முதல் 50 சதவீதமான விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் உலகவங்கி முன்னர் சுட்டிக்காட்டியிருந்தது.

கடும் சர்ச்சைக்கு உள்ளாக்கியிருக்கும் வவுனியா, நெடுங்கேணி - வெடுக்குநாறி மலைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் சென்றிருந்தார். மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை களத்துக்குச் சென்று தனது தந்தையான அமரர் ஆறுமுகன் தொண்டமான் தட்டிக்கேட்பதைப் போல் களத்தில் குதித்துள்ளார் ஜீவன் அவரது கரங்களை பலப்படுத்தவேண்டும்.

அதேபோல, இன,மத பதட்டங்களைத் தூண்டும் இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான ஒரு பொறிமுறை தொடர்பில் அமைச்சரவையில் ஜீவன் தொண்டமான் பிரதாபிக்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

## இறால் வளர்ப்பு பிரச்சனைக்கு ஒரு மாதத்தில் தீர்வு

கனகராசா சரவணன்ம

ட்டக்களப்பு, வாகரை பிரதேசத்திலுள்ள வட்டுவான்கல் சுமானியால் பாதிக்கப்பட்ட 27 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இறால் வளர்ப்பு திட்டமானது தனியார் ஒருவரின் ஆளுமைக்குள் சென்றுள்ளது இந்த பிரச்சனைக்கு நீதிமன்றத்தின் ஊடாகவோ அல்லது பேபச்சுவார்த்தை மூலமாகவோ ஒரு மாதகாலத்தினுள் தீர்வு காணப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இந்தப் பிரச்சினை தொடர்பில் நேற்று (10) கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன்பின்னரே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2004 சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக, அப்போது கொண்டுவரப்பட்ட இறால் வளர்ப்பு திட்டமானது தெரிவு செய்யப்பட்ட 27 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது இதனை தனி ஒருவர் தற்போது ஆக்கிரமித்துள்ளார். இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எனது கவனத்திற்கு கொண்டுவந்தார்.

மட்டக்களப்பில் மாத்திரமல்ல இலங்கை பூராகவும் சட்டவிரோத கடற்றொழில் ஈடுபடுவதை தடுப்பதற்கு அந்தந்த பகுதி மீனவர் சங்கங்கள் மற்றும் கடற்படையினர். கடல் தொழில் திணைக்களம் பொலிஸார் இணைந்து நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

அதேவேளை மட்டக்களப்பில் கடலில், முதல்நாள் விரிக்கப்பட்ட வலையை மறுநாள் எடுக்க போவதற்கு முன்னர், அதனை ஒரு குழு களவாடி விடுகின்றது. இது தொடர்பாக கடற்படை மற்றும் கடற்றொழில் திணைக்களம் இணைந்து ஒரு திட்டம் அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.



## இந்திய தூதுவருடனான சந்திப்பு திருப்தியாக அமைந்தது -வெடுக்குநாறி ஆலய நிர்வாகம்

க. அகரன்

இந்திய தூதுவருடனான சந்திப்பு திருப்தியாக அமைந்ததாகவும் விரைவில் தீர்வு கிடைக்க ஆவன செய்வார் என எதிர்பார்ப்பதாகவும் வெடுக்குநாறி ஆலய நிர்வாக உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத்தில் வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் உட்பட வவுனியாவை சேர்ந்த இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், கொழும்பு இந்துமாமன்றம் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு, இந்திய தூதுவரை நேற்று (10) சந்தித்திருந்தது.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டமை, மீண்டும் விக்கிரகங்கள் வைப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் ஏற்படுத்தும் தடைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. எல்லையோர கிராமங்களில் நடைபெறும் ஆக்கிரமிப்புகளுடன் சைவ அடையாளங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பாகவும் இதன்போது இந்திய தூதுவருக்கு ஆவணங்கள் ஊடாக தெளிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தம்மாலான செயற்பாடுகளை மேற்கொள்ள தாம் முனைப்பு காட்டுவோம் என இந்திய தூதுவர் தெரிவித்ததாக வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## புத்தரை காணவில்லையென பொலிஸில் முறைப்பாடு

க அகரன்

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வைக்கப்பட்டிருந்த புத்தரை காணவில்லையென அப்பகுதியில் தற்போது வசித்துவரும் தமிழர் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம், பழைய ரயில் நிலையத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (09) புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அது அன்று மாலையே அகற்றப்பட்டிருந்ததுடன் அப்பகுதியை சேர்ந்த ஒருவரே வைத்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தானே அரச காணியில் புத்தர் சிலையை வைத்ததாகவும், அதனை காணவில்லை எனவும் செட்டிகுளம் பொலிஸில் திங்கட்கிழமை (10) குறித்த நபர் முறையிட்டுள்ளார்.

அந்த நபர் நோர்வேயில் இருந்து இலங்கைக்கு 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வருகைதந்து, நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின பெண்ணொருவரை திருமணம் செய்திருந்ததுடன், கடந்த பெப்ரவரி மாதமளவில் செட்டிகுளத்தில் வந்து தங்கியுள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த புத்தர் சிலையை அவர், தனது காணிக்கு முன்பாக உள்ள அரச காணியில் வைத்துள்ளார். அந்த சிலையே காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில்

# பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அரசாங்கத்தால் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்பட்ட போதிலும், அம்பாறை மாவட்டத்தில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு தொடக்கத்தில், பொருட்களின் விலைகள் அதிக அளவில் அதிகரித்துக் காணப்பட்டன.

எரிபொருட்கள், எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டு உள்ளதோடு, தற்பொழுது நாட்டில் ஓரளவுக்கு பொருளாதாரம், சீரடைந்து வரும் நிலையில், அம்பாறை மாவட்டத்தில் பொருட்களுக்கு இதுவரையும் விலைகள் குறைக்கப்படவில்லை எனவும், புத்தாண்டு காலப்பகுதியில் கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து செலவுகள் குறைவடைந்துள்ள நிலையில் குறிப்பாக, உணவுப் பண்டங்களிலும் சீனி, மாவு ஏனைய சில பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால், அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறு பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

வர்த்தக நிலையங்களில், பொருட்களின் கட்டுப்பாட்டு விலை தொடர்பான பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இது தொடர்பாக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமுர்த்தி அபிமானி

# வர்த்தக கண்காட்சியும் விற்பனை சந்தையும்

■ வி. சுகிர்தகுமார்



ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில், சமுர்த்தி அபிமானி வர்த்தகக் கண்காட்சியும் விற்பனை சந்தையும் நேற்று (10) பிரதேச செயலக முன்வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தலைமையக சமுர்த்தி முகாமையாளர் என். கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதேச செயலாளர் வி. பபாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் உதவி பிரதேச செயலாளர் ஆர். சுபாகர், திட்டமிடல் பணிப்பாளர் ஹிசைன்டீன், நிர்வாக உத்தியோகத்தர் சோபிதா, முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், திட்டமிடல் முகாமையாளர் சத்தியப்பிரியன், தெற்கு வங்கி சமுர்த்தி முகாமையாளர் கவிதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் சம்பிரதாய பூர்வமாக விற்பனை சந்தையைத் திறந்து வைத்தார். இதன்போது, சமுர்த்தி பயனாளிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் செய்யப்பட்டன.

சமுர்த்தி வங்கியின் நடமாடும் வங்கி சேவை இடம்பெற்றதுடன், இங்கு வழங்கப்படும் பணத்தைக் கொண்டு, மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்ததையும் காண முடிந்தது.

‘உயிரைக் கொல்லும் போதை வேண்டாம்’

# திரைப்பட இயக்குநருக்கான விருது






■ க. விஜயரெத்தினம்

‘உயிரைக் கொல்லும் போதை வேண்டாம்’ எனும் திரைப்படத்துக்கான இயக்குநருக்கான விருதை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவன் பெற்றுக்கொண்டார்.

‘குவியம்’ குறுந்திரைப் படப்போட்டி - 2023 இல் மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவன் முரளிதரன் விவிக்தன் பங்குபற்றி, தேசிய மட்டத்தில் முதல் 10 திரைப்படங்களில் வெற்றி பெற்று, இயக்குநருக்கான விருதைப் பெற்று, பாடசாலைக்கு பெருமை சேர்ந்துள்ளார்.

புனித பத்று சஹாபாக்கள் நினைவு தினம்:

# மணாகிப் மஜ்லிஸ் கொடியேற்றம்

■ பாறுக் ஷிஹான்

கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் ஏற்பாட்டில், வருடாந்தம் இடம்பெறும் புனித பத்று சஹாபாக்கள் நினைவு தின மணாகிப் மஜ்லிஸ் கொடியேற்ற நிகழ்வும் வருடாந்த இப்தார் வைபகமும் தாறுஸ்ஸபா அமைய, பிரதானி மௌலவி உஸ்தாத் ஏ.ஆர். சபா முஹம்மத் தலைமையில் தாறுஸ்ஸபா அமைய தலைமையகத்தில் நடைபெற்றது.



ஞாயிற்றுக்கிழமை (09) மாலை இடம்பெற்ற இந்நிகழ்வில், புனித பத்று சஹாபாக்கள் நினைவு தின மணாகிப் மஜ்லிசினை தொடந்து கொடியேற்றப்பட்டதுடன் வருடாந்த இப்தார் வைபகமும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உலமாக்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் நிர்வாகிகள், கலை, அரசியல், இலக்கிய, ஊடகத்துறை சார்ந்தவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

ஆளுநர் உத்தரவின் பேரில் அகற்றப்பட்ட

# புன்னைக்குடா வீதி பெயர்ப் பலகை மீள நடப்பட்டது

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் உத்தரவின் பேரில், ‘எல்மிஸ் வல்கம’ வீதி என சிங்களப் பெயராக மாற்றுவதற்காக அகற்றப்பட்ட புன்னைக்குடா வீதி எனும் பெயர்ப்பலகை, அதே ‘புன்னைக்குடா வீதி’ என்ற பழைய பெயரோடு மீள நடப்பட்டது.

இந்நிகழ்வு, கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் ஏறாவூர் நகர புன்னைக்குடா வீதி சந்தியில் திங்கட்கிழமை (10) அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் உட்பட ஊர்ப் பிரமுகர்களும் சமூக நல விரும்பிகளும் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் நஸீர் அஹமட், ஆளுநர்கள் இங்கு மட்டுமல்ல, இலங்கையில் எப்பாகத்திலும் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, அத்துமீறல் செய்து இனவாதத்தை ஏற்படுத்தக் கூடாது. கிழக்கு மாகாண ஆளுநர் தன்னிச்சையாகத் தீர்மானம் எடுத்து, இனமுரண்பாடுகளை உருவாக்கும் போக்கை நிறுத்த வேண்டும் என்றார்.

ஏறாவூர் - புன்னைக்குடா வீதி, தொன்று தொட்டு புழக்கத்தில் இருந்து வரும் பெயராகும். காலி நகரைச் சேர்ந்த சிங்கள சமூகத்தவரான ‘எல்மிஸ் வல்கம’ வீதி என மாற்றுவதற்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், கடந்த மாத இறுதியில் உத்தரவிட்டிருந்ததும் ஏறாவூர் நகரை ஊடறுத்துச் செல்லும் கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் இருந்த ‘புன்னைக்குடா வீதி’ என்ற பெயர்ப்பலகை உடனடியாக அகற்றப்பட்டது. இவ்வாறு, அகற்றப்பட்ட பெயர்பலகையே, மீண்டும் அதே இடத்தில் புன்னைக்குடா வீதி என எழுதிய பாரம்பரிய பெயர்ப்பலகை, அமைச்சர் நஸீர் அஹமட்டால் நாட்டப்பட்டது.

ஏறாவூர் நகர பிரதேசம் நூறு சதவீதம் முஸ்லிம் சமூகத்தைக் கொண்டபோதும் கூட, அந்த வீதிக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவரினதும் பெயரைச் சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. ஆனால், திடீரென காலிப் பிரதேச சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஒன்பது பேர், ஆளுநருக்கு ஒரு கடிதத்தை எழுதி, அதில் ஏறாவூர் - புன்னைக்குடா வீதிக்கு ‘எல்மிஸ் வல்கம’ என பெயரை மாற்றுமாறு கோரியிருந்தனர். அந்த வேண்டுகோளை உடனடியாக அமல்படுத்தும் வகையிலேயே ஆளுநர் உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

பொலிஸார் எடுக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைளிலும்

# பல்கலைக்கழகம் குறுக்கிடாது

## மாணவர்களுக்கு உளவளத் துணை சிகிச்சை

■ நிதர்சன் விநோத்

தடைசெய்யப்பட்ட போதைமாத்திரைகளை உட்கொண்டார்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை உளவளத் துணை சிகிச்சைக்கு அனுப்புவதற்கு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

கந்தர்மடம், பழம் றோட்டுப் பகுதியில் உள்ள தனியார் மாணவர் விடுதியில் தங்கியிருந்த சமயம், பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டமை, போதை மாத்திரை வெற்று உறைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டு, பின்னர் பல்கலைக்கழக அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்ட மாணவர்களில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சில மாணவர்களை, உளவளத் துணை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்களின் சிபார்சின் அடிப்படையில், சந்தேகத்தின் பேரில், போதைக்கு அடிமையாகி இருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர்களை, தேவையான உளவளத் துணைச் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த மாணவர்களின் பெற்றோரும் அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட உள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் எடுக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைகளிலும் பல்கலைக்கழகம் குறுக்கிடாது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும், பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அவர்கள் நேற்று முன்தினம் (09) விடுவிக்கப்பட்டு இருந்தனர். எனினும், மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டு இருந்தனர்.

இதையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட மாணவர்கள், நேற்று (10) நண்பகல் பரீட்சை முடிவடைந்த பின்னர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் இருவர் மாத்திரமே போதை மாத்திரை உட்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டு உள்ளதாகத் தெரிவித்துள்ள வைத்தியசாலை வட்டாரங்கள், இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு போதையிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தன.

# மாந்தை கிழக்கில் விற்பனை சந்தை











முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும், மாந்தை கிழக்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் அபிமானி விற்பனை சந்தை நேற்று (10) இடம்பெற்றது. சமுர்த்தி முகாமையாளர் அன்ரனி குரூஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தேசிய கொடியை பிரதேச செயலாளர் செல்வி நிரஞ்சனா ஏற்றினார்.

–சுப்பிரமணியம் பாஸ்கரன்

# தமிழர் இருப்பை பாதுகாக்க பொதுக் கட்டமைப்பு

## தமிழர் பகுதி ஆக்கிரமிப்புகளை துல்லியமாக இனம் காண ஏழு பேர் கொண்ட கட்டமைப்பு

■ க. அகரன்

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்குமான பொதுக்கட்டமைப்பு வவுனியாவில் நேற்று முன்தினம் (09) உருவாக்கப்பட்டது.

தமிழர் பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் அரசாங்கத்தின் நெருக்கடிகள், பௌத்த மயமாக்கல் போன்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள், பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் வவுனியாவில் இடம்பெற்றது.

இதன்போது, குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வினையாற்றுவதற்காக இரண்டு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.



குறிப்பாக, தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புகள், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், வனவள திணைக்களத்தால் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை, தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பான தரவுகளை சேகரித்து அவற்றை துல்லியமாக இனம் காண்பதற்காக ஏழு பேர் கொண்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அத்துடன், அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக, வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் சாத்வீகப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக மற்றொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.


குறித்த கலந்துரையாடலில் மதகுருமார்கள், தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலை கழகம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிச கட்சி, தமிழர் விடுதலைகூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ தமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகளும் பொது அமைப்பினரும் கலந்துகொண்டனர்.

# புத்தாண்டு விழா

மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களின் பங்குபற்றலுடன், தமிழ்–சிங்கள புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள், மஸ்கெலியாவில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றன. (காமினி பண்டார இலங்கதிலக்க)











# மலையக இலக்கியம் - 200

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் 'மலையக இலக்கியம் - 200' விழா, தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வி.திருவள்ளுவன், அயல் நாட்டு தமிழ் கல்வித்துறை தலைவர் இரா.குறிஞ்சி வேந்தன் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி விஜயன், எழுத்தாளர் சி மகேந்திரன் ஆகியோர் பங்கேற்று விழாவை ஆரம்பித்து வைத்தனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் இந்தியாவில் வெளியிடப்பட்ட *'indo -ceylon pact'* என்ற புத்தகத்தின் முதல் பிரதியை செந்தில் தொண்டமானிடம் விஜயன் கையளித்தார்.
















பெயர் பலகைகளுக்கு தீ வைத்தமை

# நாசகார வேலை

■ பி.கேதீஸ்

சீதா எலியா, சண்டதன்ன சுற்றுச்சூழல் பூங்காவிலுள்ள பெயர் பலகைகள் மற்றும் உயரங்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகள் சிலரால் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக சீதாஎலியா விவசாய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீதா எலியா வேளாண்மை ஆராய்ச்சி நிறுவன துணை இயக்குநர் எம். சி. ஜயசிங்க தெரிவிக்கையில், நாட்டிலுள்ள 10 மிக உயரமான மலைத்தொடர்களில் ஒன்பது மலைத்தொடர்கள் இந்த இடத்தில் காணப்படுகின்றன. பிதுரங்கல,



தொட்டுகொலை கந்த, கிகிலியாமான, கிரேட் வெஸ்டன், கொனிகல் ஹில், கிரிகல்பொத்த, பரியால கந்த, ஹக்கல மற்றும் நமுனுகுல மலைத்தொடர்களின் பெயர் பலகைகள் மற்றும் அவற்றின் உயரங்களை குறிக்கும் பெயர் பலகைகள் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சண்டதன்ன சூழலியல் பூங்காவை பார்வையிட வந்தவர்கள் அல்லது காடுகளில் இருந்து பூங்காவுக்குள் பிரவேசித்த சிலரோ அல்லது குழுக்களோ இந்த நாசகார செயலை செய்திருக்கலாம் என்று தெரிவித்த அவர், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்றார்.

சண்டதன்ன சூழலியல் பூங்கா மிகவும் உணர்திறன் வாய்ந்த சூழலியல் வலயத்தில் அமைந்துள்ளதால், சுற்றுலாப் பயணிகள் அவ்வாறான சேதங்களை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கழிவுகளை கொட்டுவதை தவிர்க்குமாறும் கேட்டு, அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் நினைவுபடுத்தினார்.

# கற்பாலம் விபத்தில் இளைஞன் படுகாயம்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா -உடபுஸ்ஸலாவை பிரதான வீதியில், கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கற்பாலம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (09) மாலை இடம்பெற்ற விபத்தில் பலத்த காயமடைந்த இளைஞன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று நேருக்கு நேராக மோதுண்டு விபத்து சம்பவித்துள்ளதாக கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

படு காயங்களுக்கு உள்ளான இளைஞன், மது அருந்திய நிலையில் மோட்டார் சைக்கிளை வேகமாக செலுத்தி வந்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மரணவீட்டுக்குச் சென்று மாயமானவர் மரணம்

■ சுமணசிறி குணதிலக்க

மரண வீட்டுக்குச் சென்றுவருவதாக கூறிச் சென்ற 73 வயதான நபர், காணாமல் போயிருந்த நிலையில், இரண்டு நாள்களுக்குப் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உறவினர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, தேடுதலை மேற்கொண்டிருந்த பொலிஸார், குறுக்கு வீதியோரத்தில் கிடந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்த சியம்பலாண்டுவ பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

# கச்சேரியில் விழுந்த கான்ஸ்டபிளுக்கு காயம்

■ ஷேன் செனவிரத்ன

கண்டி, கெட்டம்பே பிரதேசத்தில் உள்ள ஹோட்டலில், வெளியரங்கில் ஞாயிற்றுக்கிழமை (09) இரவு நடைபெற்ற இசைக் கச்சேரியில் இடம்பெற்ற கைகலப்பை தடுப்பதற்கு சென்றிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், தடுமாறி கீழே விழுந்து காயமடைந்துள்ளார்.

அவர், பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொலிஸ் உத்தியோகத்தரின் கைகளில் ஒன்று முழங்கைக்கு அருகில் முறிந்து அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# 26 புதிய பஸ்கள் கையளிப்பு

■ டி.சந்ரு

இலங்கை போக்குவரத்து சபையின் ஏழு டிப்போக்களுக்கு 26 புதிய பஸ்கள், ஞாயிற்றுக்கிழமை (09) கையளிக்கப்பட்டன.

நுவரெலியா, ஹட்டன், வலப்பனை, ஹங்குராங்கெத்த, கொத்மலை, கம்பளை, நாவலப்பிட்டி ஆகிய ஏழு பஸ் டிப்போகளுக்கே இவை வழங்கிவைக்கப்பட்டன.

இதற்கான உத்தியோகபூர்வ வைபவம், நுவரெலியா கிரகறி வாவி கரையில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக அமைச்சர் பந்துல குணவர்தன கலந்துகொண்டார், அத்துடன், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி திஸாநாயக்க, சீ.பி ரட்னாயக்க, மருதபாண்டி ராமேஸ்வரன் உட்பட பஸ் டிப்போ அத்தியட்சகர்கள், டிப்போ ஊழியர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்



# துப்பாக்கி மீட்பு

■ ராமு தனராஜா

பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெல்கொல்ல பகுதியில் உள்ள வீடொன்றில் துப்பாக்கி ஒன்று மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பசறை, ஆக்கரத்தன்னை பகுதியில் முகாமிட்டுள்ள விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனையடுத்து, குறித்த வீட்டை ஞாயிற்றுக்கிழமை இரவு 6.30 மணிக்கு சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்ட போது வீட்டினுள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. அத்துடன், 35 வயதான நபரும் கைது செய்யப்பட்டார்.

துப்பாக்கியுடன், சந்தேகநபர் பசறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பசறை பொலிஸார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தக்காளி, கத்தரி எகிறின

பண்டிகை காலத்தில் தக்காளி மற்றும் கத்தரிக்காய் விலைகள் கிடுகிடுவென அதிகரித்துள்ளன. எனினும், ஏனைய மரக்கறிகளின் விலைகள் குறிப்பிட்டளவு குறைந்துள்ளன.

கடந்த காலங்களில் ஒரு கிலோ கிராம் 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் 350 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.



# வர்த்தகருக்கு தங்க மனசு

■ செ.தி பெருமாள்

சாமிமலை நகரின் பிரதான வீதியில் கிடந்த அரை பவுண் மதிப்புள்ள மோதிரத்தை கண்டெடுத்த வர்த்தகர், உரிமையாளரிடம் கையளித்துள்ளார்.

சனிக்கிழமை (08) கண்டெடுத்த மோதிரத்தை வர்த்தகரான ஷாமிந்த ஒமதுவவிதான (வயது 51), அதே நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும், கே.எஸ் ராஜூபாலனுடைய மனைவியின் மோதிரத்தையே கண்டெடுத்து ஒப்படைத்துள்ளார்.

சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மோதிரத்தை கண்டெடுத்த வர்த்தகர், அதுதொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தின் கவனத்துக்கு கொண்டுவந்ததன் பின்னர் திங்கட்கிழமை (10) உரியவரிடம் கையளித்துள்ளார்.





# பணமில்லாக் கொடுக்கல் வாங்கல் முறையை ஊக்குவிப்பதே சிறந்தது

உலகவோட்டத்துக்கு ஏற்றவகையில் ஓரளவுக்கேனும் மாறிக்கொண்டே செல்லாவிடின், ஓரிரு அடிகள் அல்ல, நீண்ட தூரத்துக்கு பின்னால் நின்றிருக்க வேண்டிய நிலைமையே ஏற்படும். மாற்றத்தை உள்வாங்கிக்கொள்ள பழகிக்கொள்ள வேண்டும். இல்லையேல், பழைய முறைமையையே கடைப்பிடிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அவை வெகுகாலத்துக்கு நிலைத்திருக்காது.

புதிய முறையை பழகிக்கொள்வது சிலருக்கு கடினமானதாக இருக்கும். எனினும், பழைமையில் தொடர்ந்தும் தொங்கிக்கொண்டிருக்க முடியாது. தொழில்நுட்ப வளர்ச்சியில் பல விடயங்கள் விரல் நுனிக்குள் அடக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப் போல, எதற்கெடுத்தாலும் நகரங்களை நோக்கிச் செல்லவேண்டிய நிலைமை இன்றில்லை.

கொரோனா காலத்தில் எவ்வாறு கற்பது என்பதே பிரச்சினையாக இருந்தது. எனினும், நிகழ்நிலை ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த முறைமை இலகுவானது என விளங்கிக்கொண்ட ஆசிரியர்கள் பலர் தங்களுடைய மேலதிக வகுப்புகளை நிகழ்நிலை ஊடாகவே இன்னும் நடத்திக்கொண்டிருக்கின்றனர். மாணவர்கள் பலரும் நிகழ்நிலையை பழக்கப்படுத்திக்கொண்டனர்.

எனினும், வகுப்பறையில் இருந்து கற்கும் முறைமையை பல மாணவர்களும் எதிர்பார்க்கின்றனர். அலைபேசி இணைப்புகளுக்கான கட்டணங்களின் உயர்வு, சமிக்ஞை, அயல் வீடுகளில் இருந்து எழுப்பப்படும் மிகையொலி இன்னும் பிரச்சினையாக இருக்கின்றன. கொரோனா காலத்தில் இவையெல்லாம் பிரச்சினையாகதான் இருந்தன.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், பொருளாதார நெருக்கடிக்குப் பின்னரே, புதிய முறைகளை அறிமுகப்படுத்தி கடைப்பிடிக்க தொடங்கினர். உதாரணமாக 'கியூஆர்' முறைமையை குறிப்பிடலாம். முதலில் பல எதிர்ப்புகள் கிளம்பினாலும், காலப்போக்கில் பழக்கப்படுத்திக்கொண்டனர். அதனூடாக, சாரதிகளுக்கு நட்டமில்லை என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

உலக நாடுகள் பலவற்றில், 'கியூஆர்' முறைமையே உள்ளது. நமது நாட்டை பொறுத்தவரையில், ஒருசில வீதித்தடங்களில் 'அட்டை' முறைமை புழக்கத்தில் விடப்பட்டது. எனினும், காலப்போக்கில் அந்தமுறை கைவிடப்பட்டது. இந்நிலையில்தான், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் 'கியூஆர்' முறைமையை அறிமுகப்படுத்த உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு காலம் கடந்த ஞானமாகும். எனினும், துரிதமாக செயற்படுத்தி, ஒரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இல்லையேல், இடைத்தரகர்கள் சுரண்டிக்கொள்வதைப் போல, பயணிகளுக்கு மிகுதி பணத்தை முறையாக வழங்காத நடத்துனர்கள், அதனை சுருட்டி தங்களுடைய பொக்கட்டுகளை நிரப்பிக்கொள்வர்.

சில்லறை இல்லையென சாக்குப்போக்கு கூறி, மிகுதிப் பணத்தை வழங்காமலே பல நடத்துனர்களும் மிகுதி பணத்தை விழுங்கிவிடுகின்றனர். இதனால், சாதாரண பயணிகளே பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

தாங்கள் பயணம் செய்யும் தூரத்துக்கு சரியான பஸ் கட்டணத்தை பயணிகள் செலுத்தவேண்டும். மிகுதி பணத்தை கொடுக்காமல் மழுப்பும் நடத்துனர்களுக்கு ஒரு பாடத்தை கற்பிக்கவேண்டுமாயின், 'கியூஆர்' முறையை காலந்தாழ்த்தாது பொது போக்குவரத்துக்கு அறிமுகப்படுத்த வேண்டியது கட்டாயமானதாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


புதிய சட்ட ஏற்பாடுகள்:

# மக்கள் நலனை உறுதிப்படுத்துமா?

மொஹமட் பாதுஷா

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்சிபெறச் செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்ற சமகாலத்தில், தேர்தல் ஒன்றைத் தவிர மற்றெல்லா நகர்வுகளும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

பெருந்தேசிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் தேச நலன் மறந்த போக்குகள், ஆளும் கட்சிக்குள் இருக்கின்ற குத்துவெட்டுகள், எதிர்க்கட்சியில் இருந்து யார் எந்தப் பக்கம் தாவுவார் என்ற சர்ச்சைகள் என்பன ஒருபுறம் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

மறுபுறத்தில், தொல்பொருட்கள் என்ற பெயரில் நிலங்களை கையகப்படுத்தல், புத்தர் சிலைகளை நிறுவி ஆக்கிரமிப்புக்கான அடிக்கல்லை நாட்டுதல், சட்டமூலங்களைக் கொண்டு வருதல் போன்ற முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவதைக் காண முடிகின்றது.

இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கின்றது என்று பிரசாரப்படுத்திக் கொண்டும், பன்மடங்கு அதிகரித்த பொருட்களின் விலையை சொற்ப அளவால் குறைத்துக் கொண்டும், ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்திய வண்ணம், இவையெல்லாம் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்போது, மூன்று சட்ட ஏற்பாடுகள் தேசிய அளவில் முக்கியத்தும் வாய்ந்தவையாக நோக்கப்படுகின்றன. பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், இதில் முதன்மையானது ஆகும்.

இரண்டாவது, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பதற்கான உத்தேச சட்ட வரைபு ஆகும்.

மூன்றாவது, இலஞ்ச ஊழல் எதிர்ப்பு தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள சட்டமூலம் ஆகும்.

மேலோட்டமாக நோக்கினால், இந்த மூன்று சட்ட ஏற்பாடுகளும் அவசியமானவை என்றே கூறலாம். பயங்கரவாதத்தையும் ஊழலையும் கட்டுப்படுத்த வேண்டியதும், உண்மையைக் கண்டறிந்து நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டியதும் தவிர்க்க முடியாத தேவைகள்தான்.

ஆனால், நமது நாட்டைப் பொறுத்தவரை, பொதுவாக அனைத்துச் சட்ட ஏற்பாடுகளும் சிறப்பாகவே எழுத்தில் வரையப்பட்டுள்ளன. ஆயினும் இங்குள்ள பிரச்சினை, சட்ட விதிமுறை பற்றியதல்ல; மாறாக, அதன் அமலாக்கம் பற்றியதாகும்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினருக்கு, நாட்டில் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணம் உண்மையாகவும் நேர்மையாகவும் இல்லாதவிடத்து, அது எவ்விதமான தாக்கங்களைக் கொண்டு வரும் என்பதை, நாம் நிறையவே கண்டிருக்கின்றோம்.

போக்குவரத்து பொலிஸார் தொடக்கம், நாட்டு நலனுக்காகப் போராடிய ஆர்ப்பாட்டக்காரர்களை கையாண்ட படையினர் வரை, மக்கள் விடயத்தில் நீதியை எவ்வாறு நிலைநாட்டினர் என்பதை நாம் மறந்து விடவில்லை. மறுபுறத்தில், நாட்டில் இலஞ்சமும் ஊழலும் மத்திய வங்கி வரை வியாபித்து இருக்கின்றது என்பதும் இரகசியமல்ல.

நாட்டில், உண்மைகளை மூடிமறைப்பதற்காக பெரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பொய்யான பிம்பங்கள் மக்களுக்கும் வெளியுலகுக்கும் காண்பிக்கப்பட்டன. யுத்த காலத்தில் மட்டுமன்றி, அதற்கு முன்னும் பின்னும் இது இடம்பெற்றது.

இந்நிலையில், நீண்டகாலமாக இழுபறியாக இருந்த உண்மையைக் கண்டறியும் முயற்சிகள் எடுக்கப்படுவது பாராட்டத்தக்கது. ஆனால், இதனது பெறுபேறுகள் மற்றும் அதற்கான பரிகார முயற்சிகள் சரிவர முன்னெடுக்கப்படாவிட்டால், இதனால் பலன் எதுவும் கிடைத்துவிடுமா என்ன?

அதுபோல, இலங்கையில் ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களும் நல்லிணக்கத்தை ஓர் ஏட்டுச்சுரக்காய் போலவே கையாண்டிருக்கின்றன. பகிரங்கமாக நல்லிணக்கம் பேசி, இரகசியமாக அதற்கெதிரான நகர்வுகளைச் செய்து வந்திருக்கின்றன.

நாட்டில் நல்லிணக்கம் கெட்டு குட்டிச் சுவராகிப் போனதற்கு, பெருந்தேசிய கட்சிகள், இனவாத சக்திகள், மதவாத அமைப்புகள், ஒட்டுக் குழுக்கள், ஆயுத இயக்கங்கள், சஹ்ரான் கும்பல் போன்ற பயங்கரவாத குழுக்கள், வெளிநாடுகள் எனப் பல தரப்பினர் வினையூக்கியாக இருந்துள்ளனர்.

ஆயினும், இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். தற்போது கூட வடக்கு, கிழக்கில் இனநல்லிணக்கத்துக்கு எதிரான நகர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. வடக்கில் குருந்தூர்மலை, நெடுக்குமாறி விவகாரங்களும், கிழக்கில் அரிசிமலை போன்ற நில ஆக்கிரமிப்பு முயற்சிகளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையல்ல.

நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை என்றாலும், அரச இயந்திரம் அதற்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு சூழலில், இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில், பிராந்தியங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை, சமத்துவத்தை ஓர் ஆணைக்குழுவால் மட்டும் ஏற்படுத்த முடியுமா என்ற வினா எழுகின்றது.

மேற்குறிப்பிட்ட இரு விடயங்களுக்கும் புதிதாக பிரத்தியேக சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ஆனால், பயங்கரவாத தடுப்பு அல்லது எதிர்ப்பு தொடர்பில் தற்போது இருக்கின்ற சட்டம் மீளப் புதுப்பிக்கப்பட உள்ளது.

இலங்கையில் பயங்கரவாத தடுப்புச் சட்டம், 1979ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அப்போது இது குறித்து முஸ்லிம்களும் சிங்கள மக்களும் அச்சம் கொள்ளவில்லை. ஏன், தமிழர்களில் ஒரு பகுதியினரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளும் தமிழ் ஆயுதக் குழுக்களும் முன்கையெடுத்திருந்த காலமாக அது காணப்பட்டதால், இச்சட்டம் தமக்கு ஒரு கேடயமாக இருக்கலாம் என சிங்கள, முஸ்லிம் மக்கள் கருதியிருப்பார்கள்; அதில் தவறும் இல்லை.

ஆனால், அடுத்த சில ஆண்டுகளில், தமிழர்கள் இச்சட்டத்தால் பெரிதும் நெருக்குவாரப்பட்டனர். வெறும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் 'அப்பாவிகள்' என நிரூபிக்கப்பட பல ஆண்டுகள் சென்றன.

2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்னர், இதே நிலையை முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டது. சஹ்ரான் கும்பல் என்ற அம்பும், அந்த அம்பை எய்தவர்களும் யாரோவாக இருக்க, இச்சம்பவத்தின் பின்னர் அப்பாவி முஸ்லிம்கள் சமூக, இன, மத ரீதியாக நெருக்குவாரப்படுத்தப்பட்டனர்.

உண்மையில், இந்தப் பயங்கரவாத நடவடிக்கைக்கு துணைபோன முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டதும் விசாரிக்கப்பட்டதும், கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டியதே. இதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

ஏனெனில், மாற்று மார்க்கக் கொள்கை என்று சொல்லிக் கொண்டு, முஸ்லிம் வேடம் தரித்த இவர்கள் செய்த காட்டு மிராண்டித்தனமான செயலின் காரணமாகவே, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் தலைகுனிய வேண்டி ஏற்பட்டது. நம்பிக்கையும் நல்லிணக்கமும் சீர்குலைந்தன.

அந்த வரிசையில், பயங்கரவாதிகள் வேறு, முஸ்லிம்கள் வேறு என்ற உண்மையை கண்டறிந்து, உலகுக்குச் சொல்வதற்கு பயங்கரவாத தடைச் சட்டமும் ஏனைய விசாரணைகளும் கூட குறிப்பிட்ட பங்களிப்பை வழங்கின.

ஆனால், இதே சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பெயரில் வகைதொகையின்றி முஸ்லிம்கள், அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். அடிப்படையும் போதிய ஆதாரமும் இன்றி கைது செய்யவும் தடுத்து வைப்பதற்குமான அதிகாரத்தை இச்சட்டம் வழங்கியிருந்தது.

2021 'அரகலய' மக்கள் எழுச்சிக்குப் பின்னரே, சிங்கள மக்கள் இந்தச் சட்டத்தின் பாரதூரத் தன்மையை அனுபவ ரீதியாக உணர்ந்தனர். இந்தச் சட்டம், கடந்த காலத்தில் எந்தளவுக்கு அதியுச்சமாக சிறுபான்மையினங்கள் மீது பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என்பதை, 2021 இல் இடம்பெற்ற கைதுகள் சிங்கள மக்களுக்கு உணர்த்தின.

இந்தப் பின்னணியில், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற அழுத்தங்கள் வலுப் பெற்றுள்ளன. இந்நிலையில், அரசாங்கம் இதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வர முயலுகின்றது.

ஆனால், இதற்கும் பரவலான எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இதற்கு அடிப்படைக் காரணம், இவ்வாறான சட்டமூலம் ஒன்று தேவையில்லை என்பது அல்ல; மாறாக, இது எவ்வாறு அமல்படுத்தப்படும் என்ற நிச்சயமின்மையே இதற்குக் காரணம் ஆகும்.

அப்படியென்றால், நாட்டில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடு ஒன்று அவசியமில்லையா? கடந்தகால நிகழ்வுகள் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்கும் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கும் ஊழலை தடுப்பதற்குமான சட்ட ஏற்பாடுகள் தேவையில்லையா என்று அரசாங்கம் மக்களைப் பார்த்து கேட்கக் கூடும்.

அந்தக் கேள்விகள் நியாயமானவைதான்! உண்மையில், இப்படியான ஏற்பாடுகள் எல்லாம் காலத்தின் தேவை என்பதை யாரும் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது.

ஏனெனில், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்பதற்காக, சஹ்ரானின் வழக்கு பெருமளவுக்கு முடிவடைந்து விட்டது என்பதற்காக, பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும் முயற்சிகளை அரசாங்கம் நிறுத்தி விட முடியாது.

பயங்கரவாதத்துக்கு எதிராக கட்டாயமாக ஒரு சட்ட ஏற்பாடு இருக்க வேண்டும். ஆனால், அது வெளிப்படையானதாகவும் அப்பாவி மக்களுக்கு அநீதி இழைக்காததாகவும் இருக்க வேண்டும்.

அதேபோல், நல்லிணக்கத்துக்காகவும் ஊழலுக்காகவும் ஆணைக்குழு மற்றும் சட்ட ஏற்பாடுகளை கொண்டு வருவது மட்டுமன்றி, அரச இயந்திரம் அதனை தமது செயலிலும் காண்பிக்க வேண்டும்.

சுருங்கக் கூறின், சட்டங்களையும் ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவோர் அவை யாருக்காக, எதற்காக என்ற தார்ப்பரியத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

எந்த ஒரு மனிதனும் முழுமையானவர் கிடையாது. தான் மிகவும் முழுமையான மனிதன் எனச் சொன்னால், அது பொய். தன்னைத்தான் பாராட்டும் எவரும், தன்னைத்தானே உணராத நிலையாகும்.

கோபம், பொறமை, சலனம், ஆற்றாமை போன்ற தவறுகளை ஏதோ ஒரு தருணத்தில் செய்துவிடுவது மனித சுபாவம். மிகவும் நல்ல மனிதர்களாகத் தோற்றம் காட்டுபவர்கள், சில சமயங்களில் ஆணவத்துடன் நடந்துகொள்கின்றார்கள்.

எனினும், ஓரிரு சின்ன விடயங்களில் செய்யும் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் விடுவது உயர்குணமாகும்.

சில விடயங்களில், தன்னை மறந்து கோபத்தைக் காட்டுவதும் உண்டு. தேவையின்றி பிரச்சினைக்குள் புகுந்து கொள்பவர்களை நாங்கள் கண்டிக்கின்றோம். உணர்ச்சிகளை வேகமாகக் காட்டிக் கொள்பவர்களே, தங்களை மறந்து, பலவீனங்களுக்குள் ஆட்கொள்ளப்படுகின்றார்கள்.

மனஒடுக்கம் யாவரையும் கட்டுப்படுத்தும். ஆனால் இதற்கு பயிற்சி, பொறுமை அவசியம். முடிவுகளைக் கண்டபடி எடுத்தால், பிரச்சினை எழுகின்றன. இவை மனிதனை குழப்பி விடுகின்றன. தவறுகளை ஒப்புக்கொண்டால் படிப்படியாக மிளிரமுடியும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

மிகவும் ஆபத்தான நிலையில்

### திருவையாறு வில்சன் வீதி பாலம்



கிளிநொச்சி, திருவையாறு வில்சன் வீதியில் மூன்றாம் பகுதியில் உள்ள சரவனாஸ் பாலத்தின் அத்திவாரம் இடிந்து வீழ்ந்த நிலையில், ஆபத்தானதாகக் காணப்படுகிறது.

இரணைமடு குளத்தின் இடது கரை பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில், திருவையாறு வில்சன் வீதியையும் மூன்றாம் பகுதியையும் இணைக்கும் பாலமே இவ்வாறு இடிந்து விழும் நிலையில் தற்போது காணப்படுகிறது.

விவசாய கிராமமான திருவையாறு பிரதேசத்தில் இருந்து, ஏனைய பகுதிகளிக்கு உழவு இயந்திரங்கள், ஏனைய வாகனங்கள் தினமும் தங்களுடைய நாளாந்த நடவடிக்கைகளுக்காக தற்போதும் குறித்த பாலத்தையே பயன்படுத்தி வருகின்றன. ஆனால், குறித்த பாலம் எவ்வேளையிலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

குறித்த பாலம், இரணைமடு குள புனரமைப்பின் ஒரு பகுதியான 'இபாட்' திட்டத்தின் கீழ் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் புனரமைப்பு செய்யப்பட்டது. ஆனால், புனரமைப்பின் போது மேலோட்டமாக பூசி மெழுகி புனரமைப்பு பணிகளை நிறைவு செய்துவிட்டனர் என்றும் பிரதேச பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த பாலத்தின் ஆபத்தின் விபரீதத்தை புரிந்துகொண்டு, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் அவசர கோரிக்கையை விடுத்துள்ளனர்.

மு. தமிழ்ச்செல்வன்

# தலாய்லாமா செய்தது பாலியல் துஷ்பிரயோகம்

## சின்மயி கண்டனம்





"சிறுவனுக்கு தலாய்லாமா செய்தது பாலியல் துஷ்பிரயோகம்" என பிரபல பாடகி சின்மயி தெரிவித்துள்ளார்.

திபெத்தின் ஆன்மிகத் தலைவரான தலாய்லாமா, சிறுவன் ஒருவனின் உதட்டில் முத்தம் கொடுக்கும் வீடியோ இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த வீடியோவில், தன் காலில் விழுந்த சிறுவனின் உதட்டில் தலாய்லாமா முத்தம் கொடுக்கிறார். மேலும், தன் நாக்கை நீட்டி, சிறுவனின் நாக்கால் தன் நாக்கைத் தொடும்படி அவர் கூறுவது, அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது.

தலாய்லாமாவின் இச் செயலுக்கு உலகம் முழுவதும் கண்டனம் கிளம்பியுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பாடகி சின்மயி தனது டுவிட்டர் பக்கத்தில், 'சிறுவனுக்கு தலாய்லாமா செய்தது பாலியல் துஷ்பிரயோகம். பெண்கள், குழந்தைகள் மற்றும் உலகத்தில் உள்ள அனைத்து மக்களையும், மதம் சார்ந்த ஆண்கள் வேட்டையாடுகிறார்கள். அதில் தலாய்லாமாவும் ஒருவர் என்று நினைக்கும் போது ஏமாற்றமடைந்தேன்' என்று பதிவிட்டுள்ளார்.

கன்னியாகுமரி

## பரீட்சையில் பாலியல் தொல்லை; ஆசிரியர் கைது

மாணவியை பரீட்சை அறையில் வைத்து ஆசிரியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் கன்னியாகுமரியில் இடம்பெற்றுள்ளது.

தமிழகம் முழுவதும் 10ஆம் தர மாணவர்களுக்கான பொதுத்தேர்வு கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகியது.

அந்தவகையில் தக்கலை அருகே உள்ள பாடசாலையில் கடந்த 6ஆம் திகதி தமிழ் பரீட்சை இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் குறித்த பரீட்சை நடைபெறும் மண்டபத்திற்கு வந்த பரீட்சை கண்காணிப்பாளரான ஆசிரிய, பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவியைத் தொட்டு பேசியபடி, பாலியல் தொல்லை கொடுத்தார் எனக்கூறப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவி, இது குறித்து தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் உடனடியாக பொலிஸ் நிலையம் சென்று புகார் அளித்துள்ளனர்.

இதையடுத்து பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர்.

மும்பை

## பக்தர்களைப் பலியெடுத்த மரம்: 7 பேர் உயிரிழப்பு



மராட்டிய மாநிலம் அகோலா மாவட்டம் பரஸ் கிராமத்தில் இந்து மத வழிபாட்டு தலமான பாபுஜி மகாராஜா கோவில் உள்ளது. இந்த வழிபாட்டு தலத்தில் மகாஆர்தி நிகழ்ச்சிக்காக நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் பக்தர்கள் பலர் குவிந்திருந்தனர். இந்த நிகழ்ச்சிக்காக மேற்கூரை போடப்பட்டிருந்தது. நிகழ்ச்சியின்போது பலத்த காற்றுடன் கனமழை பெய்ததால் பக்தர்கள் அனைவரும் அக்கூரையின் கீழ் நின்றுகொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பலத்த காற்று காரணமாக அங்கிருந்த மரம் முறிந்து பக்தர்கள் நின்றுகொண்டிருந்த மேற்கூரை மீது விழுந்தது. இதில், கூரையின் கீழ் நின்றுகொண்டிருந்த பக்தர்கள் சிக்கிக்கொண்டனர்.

இச்சம்பவத்தில் 7 பக்தர்கள் உயிரிழந்தனர். மேலும், 23 பேர் படுகாயமடைந்தனர்.

ஜப்பான்

## அதிரடி அறிவிப்பை வெளியிட்ட ஜப்பான்

### கொண்டாட்டத்தில் இளைஞர்கள்

ஜப்பானில் கொரோனாத் தொற்றுக்குப் பின்னர் குழந்தைகளின் பிறப்பு விகிதமானது வெகுவாகக் குறைவடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனால் குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்கும் விதமாக, அந்நாட்டு அரசு புதிய முடிவொன்றை எடுத்துள்ளது.


அந்தவகையில் இளைய தலைமுறையினரின் வருமானத்தை அதிகரிப்பதற்காகப் பொருளாதாரம் மற்றும் சமூகத் திட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இவ்வாறு செய்வதால் குறைந்த ஊதியம் பெறும் இளைஞர்களும் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்வார்கள். இதன் மூலம் குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்க முடியும் என ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

இவ்அறிவிப்பானது அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல்

## பிரதமருக்கு எதிராக மாபெரும் போராட்டம்




இஸ்ரேலின் பிரதமரான பெஞ்சமின் நெதன்யாகு, நீதித்துறையின் அதிகாரத்தை குறைத்து நாடாளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் அளிக்கும் சட்டத்தை அண்மையில் நிறைவேற்றினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அந்நாட்டு மக்கள், பல்வேறு கட்டங்களாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மேலும், சட்டத்தை உடனடியாகத் திரும்ப பெற வேண்டும் எனவும், நெதன்யாகு உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் பிரதமர் நெதன்யாகுவுக்கு எதிராக இலட்சக்கணக்கான மக்கள், டெல் அபூஸ் பகுதியில் திரண்டு போராட்டம் நடத்தியுள்ளார்கள்.

## கர்ப்பிணிகளே உஷார்



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட இரு கர்பிணிகளுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு மூளையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

2020 ஆம் ஆண்டு கொரோனாவால் பாதிக்கப்பட்ட இரண்டு கர்ப்பிணிகளுக்கு பிறந்த குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சி தாமதமானதும் அமெரிக்காவின் மியாமி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதில் ஒரு குழந்தை பிறந்த 13 மாதங்களில் உயிரிழந்து விட்டது. உயிரிழந்த குழந்தையின் உடலை உடற்கூறு ஆய்வு செய்ததில் அதன் மூளையில் கொரோனா வைரஸ் தடயங்கள் கண்டறியப்பட்டன. அதன் காரணமாகவே குழந்தைகளுக்கு மூளை பாதிப்பு ஏற்பட்டதாக மருத்துவர்கள் விளக்கமளித்துள்ளனர்.

எனவே கர்ப்பிணிகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டால் உடனடியாக மருத்துவர்களிடம் அது பற்றி தெரிவித்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## தூங்கினால் உயிர் போகும்

பிரித்தானியாவைச் சேர்ந்த சாண்டி என்ற சிறுமி 'சென்ட்ரல் ஹைபோவெண்டிலேஷன் சின்ட்ரோம்' என்ற அரியவகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்நோய் உள்ளவர்களுக்கு சுவாசிப்பதில் சிக்கல் ஏற்படும் அபாயம் உள்ளது. அதாவது பொதுவாக இந்நோயால் பாதிக்கப்படுபவர்களின் மூளை, ஏதோ ஒன்றில் கவனம் செலுத்தினால் சுவாசிக்க மறுத்து விடுவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் சுவாசக் குழாயில் இருந்து மூளைக்கு சமிக்ஞைகளை அனுப்ப மருத்துவர்கள் முதுகு தண்டுவடத்தில் துவாரத்தை உருவாக்கியுள்ளனர்.

இதுவரை சுமார் 1,000க்கும் மேற்பட்டோருக்கு இது போன்ற பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் ஆர்சனல் லிவர்பூல் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், லிவர்பூலின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஆர்சனல் சார்பாக, கப்ரியல் மார்டினெல்லி, கப்ரியல் ஜெஸூஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா, றொபேர்ட்டோ பெர்மினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில் பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 73 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 67 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி இரண்டாமிடத்திலும், தலா 56 புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் மூன்றாம், நான்காமிடங்களில் நியூகாசில் யுனைட்டெட்டும், மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன.

புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்ற

# படகுப்போட்டி, மாட்டு வண்டில் சவாரி

■ செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வற்றாப்பளை கண்ணகி மாட்டு வண்டில் சவாரி சங்கத்தினர் நடத்தும் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு அருகில் அண்மையில் நடைபெற்றது.

காலைநேர போட்டியாக நந்திக்கடலில் படகு (குள்ளா) போட்டி நடைபெற்றுள்ளது. இப்படகுப் போட்டியில் நந்திக்கடல், நன்னீர் மீனவர்களின் 11 படகுகள் போட்டியில் கலந்து கொண்டுள்ளன.

நந்திக்கடலில் முதன்முதலாக இப்படகுப்போட்டி நடைபெற்றுள்ளமை நன்னீர் மீன்பிடி சங்கங்களின் படகு உரிமையாளர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இப்படகுப்போட்டியில் முதலிரண்டு இடங்களையும் முத்தையன் கட்டு நன்னீர் மீன்பிடி சங்கத்தைச் சேர்ந்த படகு உரிமையாளர்கள் பெற்றுக் கொண்டுள்ளதுடன், மூன்றாமிடத்தை வற்றாப்பளை மீனவ சங்கத்தின் படகு பெற்றுக் கொண்டுள்ளது. முதலாமிடத்தைப் பெற்றவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், இரண்டாமிடத்தைப் பெற்ற படகுக்கு 50,000 ரூபாயும், மூன்றாமிடத்தைப் பெற்ற படகுக்கு 25,000 ரூபாயும் பரிசாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாலை நிகழ்வுகளாக வடமாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய மாட்டுவண்டில் சாவரி போட்டியும் கைத்தறியில் மாடுகொண்டு ஓடுதல் போட்டியும் சிறப்புற நடைபெற்றுள்ளன.

மாட்டு வண்டில் சவாரிகள் 5 பிரிவுகளாக நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாட்டு வண்டில்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

# ஐ.பி.எல்: பஞ்சாப்பை வீழ்த்திய ஹைதரபாத்




இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஹைதரபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பஞ்சாப் கிங்ஸ், 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் ஷீகர் தவான் ஆட்டமிழக்காமல் 99 (66) ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், மாயங்க் மார்க்கண்டே 4-0-15-4, மார்கோ ஜன்சன் 3-1-16-2, உம்ரான் மலிக் 4-0-32-2, புவ்னேஷ்வர் குமார் 4-0-33-1, வொஷிங்டன் சுந்தர் 1-0-6-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 144 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ் ஹைதரபாத், 17.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், ராகுல் ட்ரிபாதி ஆட்டமிழக்காமல் 74 (48), அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரம் ஆட்டமிழக்காமல் 37 (21) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அர்ஷ்டீப் சிங்க் 3-0-20-1, சாம் கர்ரன் 3-0-14-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக தவான் தெரிவானார்.

இந்நிலையில், அஹமதாபாத்தில் முன்னதாக நடைபெற்ற போட்டியில் குஜராத் டைட்டான்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: குஜராத் டைட்டான்ஸ்

குஜராத் டைட்டான்ஸ்: 204/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: விஜய் ஷங்கர் ஆ.இ 63 (24), சாய் சுதர்ஷன் 53 (38), ஷுப்மன் கில் 39 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுனில் நரைன் 3/33 [4], சுயஷ் ஷர்மா 1/35 [4], உமேஷ் யாதவ் 0/24 [3])

கொல்கத்தா நைட் றைடர்ஸ்: 207/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெங்கடேஷ் ஐயர் 83 (40), ரிங்கு சிங்க் ஆ.இ 48 (21), நிதீஷ் ரானா 45 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 2/27 [4], மொஹமட் ஷமி 1/28 [4])

போட்டியின் நாயகன்: ரிங்கு சிங்க்

இந்நிலையில், டெல்லியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 11 ஏப்ரல் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.